DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 122/2024** |
| Deposition of Witness for | : | **P.W. 2** |
| Name | : | **திரு.பழனிவேல்** |
| Father's Name | : | **முத்தையா** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | **தலைமைக்காவலர்** |
| Age | : | **53/2026** |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 23.07.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது சிவகங்கை நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். காளையார்கோவில் காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது கடந்த 02.06.2023 ம்தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் நான், ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் தட்சிணாமூர்த்தி, முநிக சொக்கநாதபாண்டியன் ஆகியோர்கள் ஆத்தாவூரணி கிழக்கு கரை ரோந்து பணி செய்தபோது ஒரு நபர் வாளோடு சுற்றிதிரிவதாக கிடைத்த ரகசிய தகவலின் படி அங்கு சென்றோம். அப்போது எங்களை பார்த்தவுடன் ஓட முயன்றபோது எங்களை பார்த்து போலிஸ் நாய்களா என்னை வேவு பார்ப்பதே வேலையாக போய்விட்டது என்றும் அருகில் வந்தால் வெட்டிவிடுவேன் என்றும் கூறியவரை நெருங்கி சென்று பிடித்தபோது அவரை விசாரித்தபோது குட்லு என்ற கார்த்திக்

த.பெ.ஆறுமுகம், கிழக்கு ஒத்தவீடு, காளையார்கோவில் என்று கூறினார். எதிரியை கைது செய்து பின்பு எதிரியின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தோம் அப்போது மணி சுமார் 12.30 மணியிருக்கும். அக்கம் பக்கத்தினர் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் வாளை கைப்பற்றியதற்காக கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதில் நானும் முநிக சொக்கநாதபாண்டியன் ஆகிய இருவரும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான்.அந்த **கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2** ஆகும். பின்பு மதியம் 1.30 மணிக்கு காவல்நிலையம் வந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உதவியாக இருந்தோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். எதிரியின் வீடு காளையார்கோவில் கிழக்கு ஒத்த வீடு என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கும் எதிரியின் வீட்டிற்கும் சுமார் 500 மீட்டர் இருக்கும். ஆத்தாவூரணியை சுற்றி வீடுகள், மருதுபாண்டியர் சிலை, அன்னியவயல் கிராமத்திற்கு செல்லும் நுழைவு வாயில் இருக்கிறது என்றால் சரிதான். சம்பவயிடம் பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடம் என்றால் சரிதான். ஒரு நபர் வாளை வைத்து சுற்றினார் பொதுமக்களுக்கு தெரிய வாய்ப்புள்ளது என்றால் சரிதான். பொதுமக்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், கிழக்கு கரையில் அதிகம் பொதுமக்கள் நடமாட்டம் இருக்காது. நான் ரோந்து பணிக்கு சென்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். ரோந்து பணிக்கு சென்றதிற்கு உத்தரவு வாங்கி சென்றோம் என்றால் சரிதான். சம்பவயிடம் நடந்த தேதியன்று எதிரிக்கு பிறந்த நாள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அன்றைய தேதியில் எதிரிக்கு பிறந்த நாள் என்றும் ஆய்வாளர் சொன்னதன் அடிப்படையில் எதிரியை அன்று விடியற்காலையில் வீட்டிலிருந்து காவல்நிலையம் அழைத்து வரப்பட்டிருக்கிறார்

என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் கையில் எழுதப்பட்டுள்ளது. நான் சொன்னது போல் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யவில்லை என்றும் பின்னீடு காவல்நிலையத்தில் வைத்து மேலதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் ் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** ; இல்லை

SUBRAMANIAN MOHANA RAMYA

Digitally signed by SUBRAMANIAN MOHANA RAMYA
Date: 2026.07.23 10:30:30 +0530

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை.**